
02. Prof. S. Yogarajah



கிழக்குப் பல்கலைக்கழகத்திலே

# பேராசிரியர் மௌனகுருவின் தடங்கள்


பேராசிரியர் செ. யோகராஜா

குமரன் புத்தக இல்லம்

கிழக்குப் பல்கலைக்கழகத்திலே

# பேராசிரியர் மௌனகுருவின் தடங்கள்

பேராசிரியர் செ. யோகராஜா
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்



குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2014

# என்னுரை

எனது நூல்களுக்கு எழுதிய என்னுரையை விட இச் சிறு நூலுக்கு - அல்ல - பெரு நூலுக்கு - எழுதுகின்ற என்னுரை இரு மடங்கு கனதியானது என்று நம்புகிறேன். ஏனெனில், இந்நூல் வெளிப்படுத்துபவை பேராசிரியர் மௌனகுரு என்ற தனி ஆளுமை பற்றியது மட்டுமன்று, எமது கிழக்கு பல்கலைக்கழக கலை பண்பாட்டுப் பீடத்தின் வரலாறு பற்றியதும் ஆகும். எமது பல்கலைக்கழகத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி அறிந்தோர், இந்நூல் வெளிப்படுத்தும் விடயங்கள் எமது பல்கலைக்கழகத்தின் வரலாற்றுடன் தொடர்புபட்டவை என்பதை நன்கு உணர்வர்.

இன்னொரு விதமாகக் கூறின் எமது பல்கலைக்கழகத்தின் ஆரம்பம் தொடக்கம் அண்மைக்காலம் வரையிலான ஒரு கால கட்ட வரலாற்றின் வெட்டு முகமாக இது அமைந்துள்ளது என்று கூடக் கூறலாம்.

அது மட்டுமன்று, இந்நூல் கூறும் விடயங்கள் எமது பல்கலைக்கழகத்திலுள்ள ஏனைய ஆசிரியர்களுக்கும் முன் மாதிரியாக உந்துசக்தியாக அமைந்திருக்கிறது என்றும் நான் துணிந்து கூறுவேன்.

கடுகு சிறிதாயினும் அதன் காரம் பெரிது என்பதை நன்குணர்ந்து சமூக நோக்கு உந்த, இதனை வெளியிட முன் வந்த நண்பர் குமரனும் இவ்வேளை பாராட்டிற்குரியவரே

28.3.2014

**பேராசிரியர் செ.யோகராஜா**
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்

---

*கிழக்குப் பல்கலைக்கழகத்திலே பேராசிரியர் மௌனகுருவின் தடங்கள்*
*எழுதியது: செ. யோகராசா*

*© 2014*

*குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது*
*39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 011 2364550, மி. அஞ்சல்:* kumbhlk @gmail.com
*3 (12) மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026*

*குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது*
*39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6*

*வெளியீட்டு எண்: 610*

கிழக்குப் பல்கலைக்கழகத்திலே

# பேராசிரியர் மௌனகுருவின் தடங்கள்

> தன்னுடைய அயராத உழைப்பினாலேயே முதுகலைமாணிப் பட்டம், கலாநிதிப் பட்டம் ஆகியவற்றைப் பெற்ற மௌனகுரு பேராசிரியராக இன்று பணியாற்றுகிறார். அவரைக் காலம் பல தடவை வஞ்சித்துள்ளது. துன்பத்தையும் துயரத்தையும் அமைதியாகத் தாங்கிக் கொள்ளும் மௌனகுருவின் மனத்துள்ளே ஓர் அசுரத்தனமான முயற்சியாற்றல் உண்டு. 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என அது பணியாற்றும். விதியையும் வெல்ல வல்ல முயற்சி அது. மௌனகுருவின் உயர்ச்சிக்கு அதுதான் காரணம்.
>
> பேராசிரியர் அ. சண்முகதாஸ் (2005)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்துடனும் வளர்ச்சியுடனும் ஏறத்தாழ 19 ஆண்டுகளாகத் தொடர்புபட்டிருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ள பேராசிரியர் சி. மௌனகுருவின் பல்கலைக்கழகத்து வாழ்க்கை எமக்கெல்லாம் சிறந்த முன்மாதிரியாகிறது. இதற்கு அடிப்படையாக வுள்ளவை, இவரது தனிப்பட்ட ஆளுமைகளும் ஆற்றல்களுமே. இந்த இயல்புகள் இவர் ஆரம்பக் கல்வி கற்ற இந்நாள் கிழக்குப் பல்கலைக் கழகமாகவுள்ள முன்னாள் வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலிருந்தே உருவாகின்றன.


**வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் 1954ம் வருடத்தில் ஒருநாள்....**

நீல நிறத்து அரைக்காற்சட்டை.... வெள்ளை நிறத்தில் சேர்ட்... கவர்ச்சி கரமான முகம்... கம்பீரத் தோற்றம்.... வந்தாறுமூலை மத்திய கல்லூரி வாசலில் தனது தந்தையுடன் காலடி எடுத்து வைக்கின்றான், கிராமத்துச் சிறுவனொருவன்! அச்சிறுவனுக்கு அது முற்றிலும் புதியதோர் சூழல்! ஐந்தாம் வகுப்பு 'ஸ்கொலர்சிப்' பரீட்சையில் சித்தி பெற்று ஆறாம் வகுப்பிலே சேர்ந்து படிப்பைத் தொடர வேண்டிய நிலையில் அவனிருக் கிறான். அவ்வாறு படிப்பைத் தொடருவோருக்கான, விடுதி வசதி கொண்ட ஒரே ஒரு கல்லூரி வந்தாறுமூலை மத்திய கல்லூரிதான். இதனாலே தான் அச்சிறுவன் அக்கல்லூரிக்கு தந்தையுடன் வரவேண்டிய தேவை ஏற்படுகின்றது.



ஆறாம் வகுப்பிலே சேர்ந்து கொண்ட அவன் தனது திறமையால் படிப்படியாக உயர்ந்து கொண்டு செல்கின்றான்! வகுப்புத் தலைவர், வித்தியாலய விடுதித் தலைவர், தமிழ்மன்றத் தலைவர், இந்து மன்றத் தலைவர், பாடசாலை மாணவ விடுதித் தலைவர் என பல பதவிகள் அவனைத் தேடி வருகின்றன. பிற்காலத்தில் பொறுப்பு மிக்க பிரச்சினைக்குரிய பதவிகளை ஏற்றுத் திறம்பட ஆற்றுவதற்கான ஆரம்ப நிலைப் பயிற்சி களையும் அனுபவங்களையும் அவன் ஏற்றுக்கொள்ளத் தயாராகி விட்டான்.

பதவிகள் பலவற்றை ஏற்றாலும் படிப்பிலே கோட்டை விடவில்லை அவன். க.பொ.த உயர்தர வகுப்பிலே சித்தி பெற்று பேராதனைப் பல்கலைக்கழகம் செல்கின்ற அரிய வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கிறது. வந்தாறுமூலை மத்திய கல்லூரியிலிருந்து 1960 இல் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு முதன் முதலாக நான்கு பேர் தெரிவாகின்றனர். அவர்களுள் அவனும் ஒருவன்!



க.பொ.த உயர்தர வகுப்பு மாணவனாக கல்லூரியில் இருந்த காலத்தில் 'பாசுபதாஸ்திரம்' என்ற நாடகத்திலே சிவனாக நடித்து பேராசிரியர் வித்தியானந்தனின் பாராட்டுக்களைப் பெற்றிருந்த அவன் இப்போது அறுபதுகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே அவரைச் சந்தித்து அவரிடம் கல்வி கற்கின்ற மகத்தான வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டமை நிச்சயம் அவனது வாழ்க்கையில் ஒரு திருப்பு முனைதான்.




ஏனெனில், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த காலத்திலேதான் பேராசிரியர் வித்தியானந்தன் தயாரித்த 'கர்ணன் போர்', 'நொண்டி நாடகம்', 'இராவணேசன்' முதலான நாடகங்களிலே பிரதான பாத்திரங்களிலே நடித்து முதன் முதலாகத் தனது ஆற்றல்களை அவன் வெளியுலகிற்கு வெளிப் படுத்தினான்.

அது மட்டுமன்றி சிறந்த கவிஞனாக பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க கவிதைப் போட்டியிலே முதற் பரிசாகத் தங்க பதக்கம் கிடைக்கிறது. அன்று

அவன் தன்னைக் கவிஞனாகத் வெளிப்படுத்தியதும் தன்னைச் சிறுகதை எழுத் தாளனாக இனங்காட்டியதும் இன்றுவரை பலருமறியாத விடயங் களாகின்றன!

**கல்வித் துறையிலும் கலைத் துறையிலும்**

பட்டதாரி மாணவனாகி வெளியேறிய பின்னர் பாடசாலை ஆசிரியராக, கொழும்பு பாடவிதான சபையின் நூலாக்கக் குழு உறுப்பினராக, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராக பணியாற்றி பெயர் சம்பாதித்துக் கொள்வதுடன் எம்.ஏ. பட்டத்தையும் கல்வியில் படடப்பின் நெறியான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக்கொள்கின்றார்.


*சங்காரம்*

இவற்றைவிட முக்கியமானதொன்று நாடகத் தயாரிப்புகளுடாக முக்கியமானதொரு நாடக நெறி யாளராக மௌனகுரு தன்னை வெளிப்படுத்திக் கொணடமையாகும். இவரை வெளியுலகிற்கு இனங் காட்டிய தென்ற விதத்திலே இவர் தயாரித்த 'சங்காரம்' (1960) மிக முக்கியமான நாடக சிருஷ்டியாகும். மனித சமூகத்தின் தோற்றத்தையும் போராட்டத்தையும் வளர்ச்சியையும் எழுச்சியையும் நம்பிக்கை மிக்க எதிர்காலத்தையும் உள்ளடக்கமாகக் கொண்டிருந்த 'சங்காரம்' தமிழ் கூறும் நல்லுலகிலே கூத்திலே சமூக உள்ளடக்கத்தை வெளிப்படுத்திய முதல் நாடகமாகின்றது. உண்மைதான், மௌனகுரு நாடக நெறியாளராக இருப்பது மட்டுமன்றி நாடக எழுத்தாளராகவும் பரிணமிக்கின்றார். மேலும், நாடகத்துறையிலே கலாநிதிப் பட்டம் பெற்றமை காரணமாக தானொரு ஆய்வாளனென்பதையும் வெளிப் படுத்திவிட்டார்.

**யாழ்ப்பாணத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும்**



கலாநிதியான மௌனகுரு தவிர்க்கவியலாத நிலை யில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளராக இணைகின்ற வாய்ப்பும் உருவாகின்றது. அதனால் பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோருடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பும் வந்தெய்துகிறது.

அனைத்தையும் விட நாடகத்துறையிலே பரி சோதனை முயற்சிகளிலீடுபடவும் சிறுவர் நாடகத்

துறையில் அதிக நாட்டம் கொள்ளவும் (முற்குறித்த) 'சங்காரம்', 'புதிய தொரு வீடு', 'அதிமானுடன்', 'வேடனை உச்சிய வெள்ளைப்புறாக்கள்', 'சக்தி பிறக்குது', 'தப்பி வந்த தாடி ஆடு' முதலான நாடகங்களூடாக உச்ச புகழ் பெறவும் யாழ்ப்பாணச் சூழல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சூழல் மௌனகுருவிற்கு வாய்ப்பளித்து அவரது வாழ்வில் மகத்தான திருப்புமுனையாகிறது.

ஏறத்தாழ இருபதாண்டுக் கால யாழ்ப்பாண வாழ்க்கைச் சூழல் மௌனகுருவிற்கு நல்ல பல வாய்ப்புகளை வழங்கி அவருக்கு அவரை உணர்த்தி வைத்து நம்பிக்கையூட்டி மட்டக்களப்புக்கு அவரை வழங்கியது என்பதில் தவறில்லை. பேராசிரியர் சிவத்தம்பி ஓரிடத்தில் பின்வருமாறு கூறியிருப்பது இதற்கு சான்றாகின்றது.

> *ஏறத்தாழ பதினைந்து வருட காலம் யாழ்ப்பாணத்திலிருந்து அங்கு வளமான அறுவடைகள் பலவற்றைச் செய்துவிட்டு இப் பொழுது மட்டக்களப்பிற்குச் சென்றுள்ளார். இவா மட்டக்களப்பு விருத்தியிலேதான் யாழ்ப்பாணப பல்கலைக்கழகத்தின் பசளை வளம் தெரியப் போகின்றது.*

**மட்டக்களப்பு உதயாஸ் கட்டிட வளாகத்தில்..... கிழக்குப் பல்கலைக் கழகத்தில்.... துறைத் தலைவராகவும் பீடாதிபதியாகவும்**

ஏலவே பல்கலைக்கழகக் கல்லூரியாகிவிட்ட வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் 1991 இல் கிழக்குப் பல்கலைக்கழகம் உருவான போது அதன் ஒரு பிரிவு அன்றைய மட்டக்களப்பின் சூழ்நிலை காரணமாக மட்டக்களப்பு 50, நியூ ரோட்டிலமைந்துள்ள 'உதயாஸ்' கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது. கலை கலாச்சார பீடமும் வர்த்தக முகாமைத்துவ பீடமும் உருவாகின. கலை கலாச்சார பீடத்தில் சமூக விஞ்ஞானத்துறையும் மொழித்துறையும் நுண்கலைத்துறையும் இஸ்லாமிய நாகரிகத்துறையும் ஆரம்பிக்கப்படுகின்றன. கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதியாகின்றார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தத்துவத்துறைப் பேராசிரியர் வே. இராமகிருஷ்ணன். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளராக விளங்கும் கலாநிதி மௌனகுரு இங்குள்ள நுண்கலைத்துறைக்கு முதுநிலை விரிவுரையாளராக வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. (கலை கலாசார பீடத்திற்கு முதன் முதலாக மேற்கூறியவர்களோடு வந்து சேர்ந்த புதிய விரிவுரையாளர்கள் திரு.வே. குணரெத்தினம், செல்வி.சி. வாசுகி ஆகியோர். சற்றுப் பின்னர் வருபவர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் சித்திரலேகா மௌனகுருவும் புதிய விரிவுரையாளர் திரு.செ. யோகராசாவும்.)

ஏனைய விரிவுரையாளர்களோடு இணைந்து உதயாஸ் கட்டிட வளாகத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்று கனவுகள் பலவற்றைச் சுமந்தவாறு வந்த கலாநிதி மௌனகுரு அங்கே கண்டது வெறும் கட்டிடங்களை மட்டுமே. அக்கட்டிடங்களின் அத்திவாரத்தைப் பலப்படுத்தி சுவர்களைச் செம்மை செய்து நல்ல அறைகள் அமைத்து நல்ல இல்லம் என்ற நிலைக்கு உருவாக்க வேண்டிய கடினமான பணி அவரைக் காத்துக் கொண்டிருக்கிறது. சவால்களை ஏற்கும் பக்குவம் ஏற்கனவே உருவாகியிருந்தாலும் இங்கு இவ்வேளை எதிர்கொண்ட சவால்கள் வித்தியாசமானவை.

பொருளாதாரத்துடன் மனித வளத்துடன் ஒழுங்கான திட்டமிடலுடன் ஆரம்பத்திலிருந்து ஆரம்பமாக வேண்டிய நிலையிலிருந்தன.

பல்கலைக்கழகம் எனில் நூலகம் அத்தியாவசியமானதொன்று. இங்கே நூலகம் ஒரு கட்டிடமாக இருக்க வேண்டியதற்குப் பதிலாக ஒரு அறையாக மட்டுமே அறைக்குள் ஒரு அலுமாரியாக மட்டுமே காட்சி தருகின்ற விசித்திரமானதொரு நிலை காணப்படுகின்றது. எனினும் கலாநிதி மௌனகுருவின் அயராத உழைப்பால் அர்ப்பணிப்பால் அது நூலகமாக மெல்ல மெல்ல உருவமெடுக்கிறது.

கற்பித்தல் என்பது பாடத்திட்டத்துடன் தொடர்புபட்டது. மாணவர்கள் வந்த பின்னருங்கூட இங்கே பாடத்திட்டங்கள் உருவாகாத நிலையில் நுண்கலைப் பாடத்திட்டமும் தமிழ்ப் பாடத்திட்டமும் கலாநிதி மௌன குருவினால் உருவாக்கப்படுகின்றது. ஏனைய பாடத்திட்டங்களும் கலாநிதி மௌனகுருவின் தூண்டுதலால் பிற பல்கலைக்கழகத்து முதுநிலை விரிவுரையாளர்களது உதவியினால் உருவாகின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது. எனினும் பாடத்திட்டங்கள் மட்டும் போதியனவன்று. அவற்றிற்கு உயிர்கொடுக்கின்றவர்களான விரிவுரையாளர்களும் அவசியமல்லவா?

புதிய விரிவுரையாளர்களாக பலர் வரக்கூடிய ஆரோக்கியமான சூழல் உருவாகிறது. திருமதி. அம்மன்கிளி முருகதாஸ் (தமிழ்), செல்வி. நதிரா (தமிழ்), திருமதி. ரூபி வெலன்ரீனா (தமிழ்), திரு. ரவி (தத்துவம்), திரு. கிருஷ்ணமோகன் (அரச அறிவியல்), திரு. சிவநாயகம் (அரச அறிவியல்), கலாநிதி யு.வி.தங்கராசா (சமூகவியல்), திரு. பால சுகுமார் (நாடகமும் அரங்கியலும்), திரு. ஜெயசங்கர் (நாடகமும் அரங்கியலும்), செல்வி. பொன்னையா (புவியியல்), திரு. வர்ணகுல

சிங்கம் (புவியியல்), திரு. செல்வராசா (கல்வி), கலாநிதி சாமிநாதன் (ஒப்பீட்டுச்சமயம்), திரு. பாலகைலாசகம், திரு. கென்னடி (ஆங்கிலம்), திருமதி. கேசவன் (இந்து நாகரிகம்), திரு. முகுந்தன் (இந்து நாகரிகம்) முதலானோர் இவ்வேளை (1991-1998) வந்து சேர்கின்றனர் (தற்போது இங்கில்லாதவர்கள் பெயர்கள் உள்ளடக்கப்படவில்லை)

இவர்கள் அனைவரதும் தெரிவில் கலாநிதி மௌனகுருவிற்கு ஏதோ ஒரு விதத்தில் முக்கிய பங்கிருக்கிறது என்பதே இங்கு நினைவுகூரப்பட வேண்டிய விடயமாகிறது.

இவர்களுள் கணிசமானோர் (இப்பட்டியலில் இடம்பெறாதோரும் உள்ளனர்) யாழ்ப்பாணப் பிரதேசத்தவர்கள் என்பதால் அத்தகையோரைத் தெரிவு செய்தது காரணமாக மௌனகுரு பிரதேசப் பற்றாளர் சிலரது ஏச்சிற்குள்ளாக நேரிட்டாலும் என்றும் போல் அன்றும் கலாநிதி மௌனகுரு திறமைக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்தவரென்பதையும் எத்தகைய பழிகள் தொடர்ந்து வந்தாலும் தனது நேர்மையான செயற்பாடுகளை பல்கலைக்கழக வளர்ச்சிக்காக கலாநிதி மௌனகுரு செய்துவந்துள்ளார். என்பதையும் மறுக்க முடியாது. மேற்கூறிய விரிவுரையாளர்களுள் பலர் தங்களது புலமைத்திறனை வளர்த்து சமூக அங்கிகாரம் பெற்றிருப்பதும் சிலர் பீடாதிபதிகளாக கடமையாற்றியதும் இவற்றால் பல்கலைக்கழகம் உயர்வு பெற்றதும் அவர்கள் பற்றிய கலாநிதி மௌனகுருவின் கணிப்பு பொய்க்கவில்லை என்பதற்கு சான்றாகின்றன.

மாணவர்களது புதிய புதிய கோரிக்கைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை அவ்வப்போது கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்டது. அத்தகையவற்றுள் முக்கியமானதொன்று, சிறப்புக் கற்கை நெறிகளை ஆரம்பிக்க வேண்டுமென்பது! இளம் விரிவுரையாளர்கள் இருந்து வந்த சூழலில் அது அசாத்தியமானதொன்று. அசாத்தியமான வற்றை சவால்களாக ஏற்று சாத்தியமாக்கக்கூடிய ஆளுமையுள்ளவர் கலாநிதி மௌனகுருவாதலினால் தமிழ், நுண்கலைத்துறை ஆகியவற்றிலே சிறப்புக் கற்கை நெறிகளை ஆரம்பிப்பதிலே அதிக சிரமமிருக்கவில்லை!

நுண்கலைத்துறைக்கும் தமிழிற்கும் முதுநிலை விரிவுரையாளர்கள் ஏலவே இருந்தமையாலும் இரண்டாம் வருடத்திலிருந்து ஆரம்பிப்பதற்குப் பதிலாக மூன்றாம்வருடத்திலிருந்து சிறப்புக் கற்கை நெறி ஆரம்பித்தமை யாலும் மலைபோலிருந்த பிரச்சினை குறுகிய காலத்துள் துகள்துகளானது.

மட்டக்களப்பின் உதயாஸ் கட்டிடம் வளர்ந்து வரும் மாணவர் தொகைக்குப் போதாத போது வெபிலி குறுக்கு வீதியிலமைந்திருந்த சிங்கள மகாவித்தியாலயம் புனரமைக்கப்பட்டு அங்கு வகுப்புகள் ஆரம்

பிக்கப்படுகின்றன .இதை ஒழுங்கு பண்ண பீடாதிபதியான மௌனகுரு எடுத்த பல்வேறுவகைான முயற்சிகளை அங்கு அன்றிருந்தோர் மட்டுமே அறிவார்கள்.எனினும் இக் காலத்தில்தான் கிழக்குப்பல்கலைக்கழகத்தை வெளியேகாட்டும் பலமுயற்சிகள் அங்கு மேற் கொள்ளப்பட்டன. நுண் கலைத்துறை மாணாக்கர்கள் கன்னன்குடா போன்ற கிராமப் புறங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.மக்களோடுமக்களாக இருந்து விடிய விடிய கூத்துகளையும் கோயிற் சடங்களையும் பார்க்கும் சநதர்ப்பம அவர்கட்கு ஏறபடுத்திக் கொடுக்கப்பட்டது.

கண்ணகி வழக்குரை சம்பந்தமான முழுநாட் கருத்தரங்கு கலைப் பீடத்தால் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடத்தப்பட்டதுடன் கண்ணகி குளுர்த்திப் பாடல் மேடை நிகழ்வும் நடபெற்றது. இது பின்னர் ரூபவாகினியில் ஒளிபரப்பாகியது

மட்டக்களப்பின் வரலாறு பண்பாடு சம்பந்தமான முழுநர்ள் கருத் தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது.

முதன் முறையாக மட்டக்களப்புக் கூத்தாட்டமுறைகள் கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் சிங்கள மக்களுக்குக் காட்டப்பட்டது. மகாகவி யின் ‘புதியதொரு வீடு’ நவீன நாடகம் கலைப் பீடத்தால் தயாரிக்கப்பட்டது.

தமிழ்நாட்டிலிருந்து பீடாதிபதி மௌனகுருவால் இங்கு அழைத்து வரப்பட்ட ‘சுபமங்களா’ பத்திரிகை ஆசிரியரான கோமல் சுவாமிநாதன் கிழக்குப் பல்கலைக்கழகம் ஓர் எலிமெண்டரி பாடசாலைபோல காட்சி தரினும் அதன் செயற்பாடுகள் மிகக் காத்திரமானவை என அன்று. 1994 இல் ‘சுபமங்ளாவில்’ எழுதியிருந்தார்.

**(வந்தாறுமூலை) கிழக்குப் பல்கலைக்கழகத்தில்... பீடாதிபதியாக.....**




உதயாஸ் கட்டிடத்திலே கருக்கொண்டு உருக்கொண்டு உருவாகி வந்த பீடங்கள் அனைத்தும் வந்தாறு மூலைக்கு இடம் மாற வேண்டிய நிர்ப்பந்தம் 1996 இல் உருவானது. பீடம் இடம் மாறியதுடன் கலை கலாசார பீடத்திற்குரிய பீடாதிபதியும் இடம் மாறு கின்ற நிலைமை ஏற்படுகிறது. கலாநிதி மௌனகுரு இரண்டாவது தடவை பீடாதிபதியாகின்றார்.

முன்னைய பிரச்சினைகள் இப்போது பூதாகர மானதாக உருவெடுக்கின்றன. கலைப்பீட மாணவர் தொகை பெருகிய அளவிற்கு கட்டிட வசதிகள்,

விரிவுரை மண்டப வசதிகள் பெருகவில்லை. இவற்றைச் சமாளிக்க வேண்டிய நிலை புதிய பீடாதிபதியான கலாநிதி மௌனகுருவை எதிர்நோக்கியது. தற்காலிக கொட்டில் வசதிகளை ஏற்படுத்தியதனூடாக ஒருவாறு பிரச்சினை சமாளிக்கப்பட்டது. அதிருப்தியிலிருந்த மாணவர்களை அவர் தனது அன்பான பேச்சாலும் அர்ப்பணிப்பான செயற்பாடுகளினாலும் தம் வசப்படுத்தினார்.

**'நெய்தல்' ஆய்வுச் சஞ்சிகையும் ஆய்வு மன்றமும்**



புதிய விரிவுரையாளர்களுக்கான அவசியம் மேலும் உணரப்பட்ட நிலையில் புதிய விரிவுரையாளர்கள் சிலர் தெரிவு செய்யப்படுகின்றனர். இளம் விரிவுரை யாளர்களை ஆய்வுத்துறை நோக்கி ஆற்றுப்படுத்து வதற்காக பீடாதிபதியின் முயற்சியினால் 'நெய்தல்' என்ற ஆய்வுச் சஞ்சிகை வெளியிடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மாதந்தோறும் விரிவுரை யாளர்கள் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கும் நோக்கில் ஆய்வு மன்றக் கூட்டத் தொடர் ஒன்றும் இடம்பெற ஆரம்பித்தது.

நாடகமும் அரங்கியலும் சிறப்புக் கற்கைநெறி மாணவர்கள் கிழக்கிலங்கை சார்ந்த கலைகள், சடங்குகள் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டனர். காலப்போக்கில் இதனால் கிழக்கிலங்கைச் சமூகத்திற்கும் மாணவர்களுக்குமிடையில் நெருங்கிய உறவுகள் ஏற்பட ஆரம்பித்தன. (உலக நாடக தின விழாக்கள் அவ்வுறவுகளை மேலும் வலுப்படுத்தின.)

இவ்வாறே இம்மாணவர்கள் புலமைசார் தேடல்களை மேற்கொண்டு கொழும்பிற்கு அடிக்கடி செல்லும் வாய்ப்புகள் உருவாகின. 1992 ஆம் ஆண்டளவில் பேராசிரியர் சரச்சந்திராவை இம்மாணவர்கள் சந்தித்தமை இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கதொன்று.

இத்தகைய செயற்பாடுகளினால் பெரும்பான்மையினம் சார்ந்த புத்திஜீவிகள், கலைஞர்களுக்கும் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் நல்லுறவு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் ஆரம்பமாகின. (இத்தகைய நல்லுறவினை உலக நாடக தின விழாக்கள் மென்மேலும் வலுப்படுத்தியமை பற்றி பின்னர் கூறப்படும்.)

மட்டக்களப்பில் தொண்ணூறுகளில் இடம் பெற்ற அசம்பாவிதங் களினால் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்த முஸ்லிம் மாணவர்களும்



*பேரா. சரச்சந்திராவுடன் பேரா. மௌனகுருவும்*
*அவருடன் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும்*

ஊழியர்களும் விரிவுரையாளர்களும் பேராதனைப் பல்கலைக்கழகத் திற்குத் தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டிருந்தார்கள். கலைப் பீடாதிபதி யான பின் மௌனகுரு அவர்களை மீண்டும் இங்கு அழைக்கும் முயற்சி களை மேற்கொண்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கடமையாற்றிய கல்விசாரா ஊழியர்களான அன்சார் அலியார் முதலானோர் மீண்டும் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர்கின்றனர். இஸ்லாமிய மஜ்ஜில்ஸ் உருவாகி சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்ததில் பீடாதிபதி மௌன குருவின் தூண்டுதல் மிகுந்த பக்க பலமாய் இருந்தது. உலக நாடகதின விழாக்களில் இஸ்லாமிய மக்களின் சீனடி சிலம்படி, றபான் ஆகியன இடம்பெறச் செய்தல் மூலம் கிழக்குப் பல்கலைக்கழகப் பண்பாட்டினுள் அவர்களும் இணையக் காலாயினார்.

இத்தகைய செயற்பாடுகள் பலவற்றினால் கிழக்கிலங்கையின் இன்னொரு முக்கிய இனமான முஸ்லீம் சமூகத்திற்கும் தமிழ்ச் சமூகத் திற்குமிடையிலான புரிந்துணர்வும் நெருக்கமான உறவும் வலுப்பெறத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது.

**பீட அவைக் கூட்டங்கள்**

பீடமொன்றின் முக்கிய செயற்பாடுகள் கருக்கொள்வதிலும் உயிர் பெறுவதிலும் பீடாதிபதிக்கு பெரும் பங்கு இருக்குமெனில் அதன்

பின்புலத்திலே பீட அவைக் கூட்டங்களுக்கும் முக்கிய பங்கிருக்கு மென்பது யாவருமறிந்ததொன்றே.

பீடாதிபதி மௌனகுரு காலத்துப் பீட அவையிலே நீண்ட கால அனுபவ முதிர்ச்சியும் பேச்சுச் சாமர்த்தியமும் கொண்ட பலசாலியாக பேராசிரியர் இராமகிருஷ்ணன் திகழ்ந்தார். அவரது கண்டனக் கணைக்குத் தப்புவது அரிதிலும் அரிது! பீடாதிபதி மௌனகுருவிற்கும் அவருக்கு மிடையில் அடிக்கடி பலத்த சொற்போர் உருவாகும். சமாந்தரமாக இருவரும் உரையாடுவர்

போர் மூண்டு அனர்த்தங்கள் ஏற்படுமென்று எண்ணுகின்ற வேளை களில் இறங்கி வருதல், ஒன்றைக் கொடுத்து மற்றொன்றைப் பெறுதல், கனிவானதும் பணிவானதுமான வார்த்தைப் பிரயோகங்கள், கோபமுறாது நிதானமாக பிரச்சினைகளை, அவை தரும் விளைவுகளை விளக்குதல் போன்ற பீடாதிபதி மௌனகுருவின் சாமர்த்தியமான செயற்பாடுகளினால் முடிவில் அனைத்தும் சுமூகமாக நிறைவேறுவதே வழக்கம். இவ்வாறாக அரங்கேறி முடிந்த நாடகங்கள் தந்த சுவாரஷ்யமான அனுபவங்கள் அன்றைய கால பீட அவை உறுப்பினர்களால் என்றுமே மறக்கமுடியா தவை. அவர்கள் கற்றுக் கொண்ட பாடங்களும் பலவாகும்.

கலைப்பீட அவைக் கூட்டங்கள் முடிந்த பின்னர், அவை எல்லா வற்றையும் மறந்து தோழமையுடனும் எவருக்கும் உதவி செய்கின்ற மனப்பான்மையுடனும் அன்றைய பீடாதிபதி மௌனகுரு நடந்து கொண்டமை அத்தகைய பாடங்களுள் முக்கியமானதொன்று என்பது வற்புறுத்தப்படவேண்டியதொன்று.

ஏலவே, நீண்ட காலமாக செனற்சபை உறுப்பினராக இருந்து வந்த கலாநிதி மௌனகுரு இப்போது பீடாதிபதியான பின்னர் கவுன்சில் உறுப்பினராகின்ற வாய்ப்பையும் பெறுகின்றார். இதனால் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கும் வெளிச் சமூகத்திற்கும் நன்மை பயக்கின்ற பல திட்டங்களை கொண்டுவரும் வாய்ப்புகளை பீடாதிபதி மௌனகுரு நன்கு பயன்படுத்திக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகின்றது.

**இலக்கிய கலாநிதிப் பட்டங்கள்**

இக்காலகட்டத்திலேதான் ஈழத்து அறிஞர்களான மட்டக்களப்பு சார்ந்த மகா வித்துவான் நடராசா, வித்துவான் சா.இ.கமலநாதன், பண்டிதர் வீ.சீ. கந்தையா, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, திரு. வ. சிவசுப்பிரமணியம் முதலானோருக்கும் யாழ்ப்பாணம் சார்ந்த குழந்தை சண்முகலிங்கம் முதலானோருக்கும் கிழக்குப் பல்கலைக்கழகத்தால் கலாநிதிப்பட்டம்

வழங்கப்படுகின்றது. திரு. செல்வராஜகோபால் (ஈழத்துப் பூராடனார்) முதலானோருக்கு இலக்கிய முதுமாணிப்பட்டம் வழங்கப்படுகின்றது. இவற்றின் பின்புலத்தில் கலாநிதி மௌனகுருவிற்கு முக்கிய இடமிருந் துள்ளமை பற்றி இவ்வேளை குறிப்பிடுவதும் அவசியமாகின்றது.

**புதிய துறைகள், புவியியற் துறை**

மௌனகுரு பீடாதிபதியாக இருந்த காலத்திலே புதிய துறைகளும் பாடநெறிகள் சிலவும் ஆரம்பிக்கப்பட்டன. புவியியற்துறை அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட புதிய துறையாகும். 1993 இல் கலைப்பீடத்தில் இத்துறை ஆரம்பிக்கப்பட்டது. இப்புவியியற்துறைக்கு ஆரம்பத்தில் மௌனகுருவே தலைவராகவிருந்தார். புவியியற் துறைக்கு நிதி ஒதுக்கப்படாதிருந்த நிலையில் தான் தலைவராகவிருந்த நுண்கலைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தே புவியியல் துறைக்குரிய தளபாடங்கள் வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தன் துறையான நுண்கலைத்துறை மாத்திரமன்றி பிற துறை வளர்வதிலும் அவர் செலுத்திய அக்கறை இதனூடாகப் புலனாகின்றது.

**ஒப்பீட்டுச் சமயம்**


இவர் காலத்தில் ஒப்பீட்டுச்சமயமும் பிள்ளைநலத்துறையும் ஆரம்பிக்கப் பட்டன. ஒன்றிற்கு மேற்பட்ட மதங்கள் நிலவுகின்ற மட்டக்களப்புச் சூழலில் மத ஒற்றுமையை உருவாக்கும் நோக்குடன் ஒப்பீட்டுச் சமயம் என்ற ஒன்றே அவசியம் என்ற தூரப்பார்வையோடு இப்பாடநெறி பல்கலைக்கழக மானியக்குழுவின் ஆலோசனையுடன் தொடங்கப்பட்டது.

**பிள்ளை நலத்துறை**

1994இல் கல்வியியல் தொடங்கப்பட்ட போது பிள்ளைநலத்துறை தொடங்கவே ஆரம்பத்தில் அனுமதி தரப்பட்டது. இன்று இவ்விரு பாடநெறிகளும் தனித்தனித் துறைகளாகத் திகழ்வது குறிப்பிடத்தக்கது.

**இந்து கலாசாரம்**

மௌனகுரு பீடாதிபதியாகவிருந்த காலத்திலே இந்துப் பாடநெறி தொடங்கவும் முயற்சி எடுக்கப் பட்டது. எனினும் மானிய ஆணைக்குழு ஆரம்பத்தில் அதற்கான அனுமதியை வழங்கவில்லை. அதற்கான பழி பீடாதிபதி மீது சிலரால் சுமத்தப்பட்டமை பலருமறியாத விடயமாகும்.



எனினும் கால ஓட்டத்தில் இந்துப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டமை மாத்திரமன்றி அதற்கான பாடத் திட்டத்தை வகுக்கும் பொறுப்பும் அப்பாடத்தினை ஒருங்கிணைத்து நடத்தும் பொறுப்பும் நுண்கலைத் துறைத் தலைவரான மௌனகுருவிடம் விடப்பட்டது. பேராசிரியர் சி. பத்மநாதன், பேராசிரியா கா. சிவத்தம்பி, பேராசிரியர் கோபாலகிருஸ்ண சர்மா போன்ற புலமையாளர்களுடன் கலந்துரையாடி அவர்கள் ஆலோசனை கட்கிணங்க மௌனகுருவே அப்பாடத் திட்டத்தை வரைந்தார்.

அதற்குமப்பால், மட்டக்களப்பின் இந்துப் பண்பாடுபற்றி பிரம் மாண்டமான கண்காட்சியொன்றினை ஏற்பாடு செய்ததுடன் 'மட்டக் களப்புத் தமிழகத்தில் இந்துப் பண்பாடு' என்ற நூலொன்றினை மௌனகுரு பதிப்பித்ததும் வெளியிட்டமையும் மனங்கொள்ளத்தக்கது

**வருகை தரு பேராசிரியர்களை வரவழைத்தமை**

வருகைதரு விரிவுரையாளர்களை பேராசிரியர்களை கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு வரவழைத்ததனூடாக மாணவர்களது புலமைப் பெருக்கத்திற்கு புதிய இரத்தம் பாய்ச்சப்படுகின்றது. பேராசிரியர் நந்தகுமார் (புவியியல்), பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா (அரசறிவியல்), பேராசிரியர் கனகரெத்தினம் (இந்து நாகரிகம்) ஆகியோரிடம் சில மாதங்களுக் காயினும் கற்றுக் கொள்ளுகின்ற வாய்ப்பு எமது மாணவர்களுக்கு ஏற்படுகின்றது. புவியியல்துறை மாணவர்கள் பேராசிரியர் சிவச் சந்திரனிடம் ஓராண்டும் தத்துவத்துறை, நுண்கலைத்துறை மாணவர்கள் பேராசிரியர் கிருஷ்ணராசாவிடம் ஓராண்டும் கல்வி கற்கின்றனர். நாடகமும் அரங்கியலும் கற்கின்ற மாணவர்களும் பேராசிரியர் சிவத் தம்பியிடம் ஈராண்டு கல்வி கற்கின்ற அரிய வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டனர். முதுகலைமாணி (நுண்கலையும் நாடகமும் அரங்கியலும்) பாடத்திட்டங்கள் செம்மையுறுவதற்கும் பேராசிரியர் சிவத்தம்பியின் பேருதவி கிடைக்கின்றது.

மேற்கூறிய வழிகளில் கலை கலாசார பீடம் வளம் பெற்றதில் கலாநிதி மௌனகுருவின் பங்கு கணிசமானதென்பதனை வற்புறுத்த வேண்டியது அவசியமன்று. மேற்கூறியவற்றில் ஈடுபாடு கொள்வதற்கு பல்கலைக்கழக முன்னேற்றச் சமூக நோக்கு என்பவற்றோடு பிறிதொரு காரணமும்

கலாநிதி மௌனகுருவின் உள்ளத்தில் அவரை அறியாமல் ஒளிந்திருந்து அவற்றை உந்தியிருக்க வேண்டுமென்று கூறத்தோன்றுகிறது. மௌனகுரு நுண்கலைத்துறைத் தலைவராக இருந்த போது ஆற்றிய பணிகளால் அவருக்குக் கிட்டுகின்றது.

**நுண்கலைத் துறைத் தலைவராக**

கலாநிதி மௌனகுரு பீடாதிபதியாக இருதடவைகள் இருந்த காலத்திலும் பின்னர் பீடாதிபதியாகக் கடமையாற்றாத போதும் நுண்கலைத்துறைத் தலைவராக தொடர்ந்து இருந்து வந்துள்ளார். இந்த குறுகிய காலப் பகுதியில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை செய்த சாதனைகள் எண்ணில் அடங்காதவை.




*நுண்கலைத்துறை நடத்திய உலக நாடக தின விழா*

**உலக நாடக தினவிழா**

அவற்றுள் முதற்தரச் சாதனையென்று முதலில் குறிப்பிடத்தக்கது 1999 - 2003 வரையும் பின்னர் 2005 ஆம் ஆண்டிலும் நுண்கலைத்துறை நடத்திய உலகநாடகதின விழாக்களாகும் இவ்விழாக்களின் போது பாரம்பரிய வடமோடி தென்மோடி கூத்துக்கள் வெளியே மாணவர்கள் அமைத்த வட்டக்களரியில் ஆடப்படுகின்றன.

நாடகங்கள் உள்ளே படச்சட்ட மேடையில் நிகழ்த்தப்படுகின்றன. நுண்கலைத்துறை மாணவர்களது உறங்கிக் கிடந்த ஆற்றல்கள் உயிர்ப்புறுகின்றன. நாடக அளிக்கைகளூடாக அவர்களை நாடறிகின்றது.



உலக நாடக தின விழாவில் தலைக்கோல் விருது - விருது பெறுபவர்கள் கூத்துக் கலைஞர் நாகமணிப் போடி அண்ணாவியார், வயது 80, நாடகக் கலைஞர் பிரான்சிஸ் ஜெனம், வயது 65


அவர்கள் பங்கு பற்றிய 'இராவணேசன்' (வடமோடி நாடகம்), 'புதியதொரு வீடு' (ஒயிலாக்க நாடகம்), 'தேவலோக யானை' (சிறுவர் நாடகம்), 'சுத்தமாக்குவோம் சுத்தமாக்குவோம்' (தெருவெளி நாடகம்), 'வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்' (சிறுவர் நாடகம்) முதலியன முக்கிய கவனிப்பிற்குள்ளாகின்றன.

மலை நாட்டுக் கலைகளான காமன் கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் முதலானவற்றையும் மட்டக்களப்பில் வட்டமேடையிலாடப்படும் மரபுவழிக் கூத்துக்களையும், மகிடிக்கூத்து, பறை மேளக் கூத்துகளையும் சிறந்த சிங்கள நாடகங்களையும் பார்த்து ரசிக்கின்ற உன்னத வாய்ப்பு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் கிட்டுகின்றது.

அதே வேளையில் உலக நாடக தின விழாக்களில் சுற்றாடலில் உள்ள பாடசாலை நாடகங்களும் பங்கேற்கின்றன.

**தலைக்கோல் விருது**

உலக நாடகதின விழாக்களின் போது ஒவ்வோராண்டிலும் ஈழத்தின் சிறந்த சிங்களக் கலைஞர்(தர்மஸ்ரீ பண்டார நாயக்க) கௌரவம் பெறு கிறார். பிற பிரதேச தமிழ்க் கலைஞர்களுக்கு (ஜவாஹர் - கொழும்பு, பிரான்சிஸ் ஜெனம் - யாழ்ப்பாணம்), மட்டக்களப்பின் மூத்த கலைஞர் களுக்கு (மூனாகானா, நாகமணிப் போடி, செல்லையா அண்ணாவிமார்),



*மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை*


பறை மேளக்கலைஞர் பரசுராமன் ஆகியோருக்கு தலைக்கோல் விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றது.

**பல இன மக்களின் இணைப்பு**

முஸ்லிம் மக்களது கலைகள் ( உதாரணம் பொல்லடி) அறிமுகமாகின்றன. பறங்கி மக்களது கபறிஞ்ஞா போன்ற கலை நிகழ்ச்சிகளும் மேடையேறு கின்றன.சிங்கள நாடகங்கள் மேடையேறுகின்றன. இவ்வாறு நோக்கும் போது மட்டக்களப்புப் பிரதேச தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், சிங்கள கலைஞர்கள் பறங்கியின மக்களுடன் புதிய மாணவர் தலைமுறை இணை கின்ற மகத்தான வாய்ப்பினை உலக நாடக தின விழா ஏற்படுத்தியுள்ளமை புலப்படுகின்றது.

**நாடகப் பயிற்சிப் பட்டறைகள்**

நுண்கலைத்துறை மாணவர்களும் விரிவுரையாளர்களும் இணைந்து கல்முனை, பட்டிருப்பு, மட்டக்களப்பு முதலான இடங்களிலே மாணவர்கள் நடத்திய பயிற்சிப் பட்டறைகளும் கொழும்பிலே சிங்களக் கலைஞர் களுக்கு (2005) நடத்திய பயிற்சிப்பட்டறைகளையும் ஆளுமைமிக்க எதிர்கால கலைஞர்கள் உருவாக்கத்திற்கு இயன்ற பங்களிப்பினை வழங்கு கின்றன.



*இராவணேசன் (2000) இந்திரஜித், இலக்குவன் சமர்*



'சிங்கபாகு' நாடகத்தில் (1961) சிங்கமாக வந்தவரும் (மார்க் அன்ரனி)
'இராவணேசன்' நாடகத்தில் இராவணனாக வந்தவரும் (மௌனகுரு)

*சந்திப்பு சரத்சந்திரா மரபும் வித்தியானந்தன் மரபும்*

**நுண்கலைத்துறைத் தயாரிப்புகள்**

இன்று பின்நோக்கிப் பார்க்கின்ற போது நுண்கலைத் துறையின் கலைத் துறை ஆற்றுகைக்குள் பல தயாரிப்புகள் நிலையான பங்களிப்புகளாய் இருப்பது புலப்படுகின்றது. அவற்றில் ஒன்று லயம் - மண்ணின் தாளங்கள். (இது ஈழத்தின் மண்சார்ந்த கலைகளின் வெளிப்பாடுகளும் அவற்றின் ஒருங்கிணைவுகளுமாகும்.) மற்றொன்று கிழக்கிசை. (இது கிழக்கு மாகாணத்தின் முக்கியமான இசைப்பாடல்கள் கொண்ட நிகழ்ச்சித் தொகுப்பு.) பிறிதொன்று கூத்தின் அழகியல். (இது பாரம்பரியக் கூத்து களின் அழகியல் அம்சங்களை இனங்காட்டுவது.) இராவணேசன் (மட்டக்

களப்பு வட மோடிக் கூத்தினை அடிப்படையாக வைத்து மீளுருவாக்கப் பட்ட புதிய நாடகம் இது.) இவை யாவும் மௌனகுருவின் தயாரிப்புக்களாகும்.

ஈழத்தின் மட்டக்களப்பின் கூத்துக் களினதும் இசைப்பாடல்களினதும் சிறப்புக்கள் பற்றி இளந் தலைமுறையினர் சிந்திப்பதற்கும் ஆற்றுப் படுத்தப்படுவதற்குமான முக்கியமான ஆவணங்களாக இவை உள்ளமை கண்கூடு.

இவற்றை விட நுண்கலைத்துறை விரிவுரையாளாகளாயிருந்த பால சுகுமாரின் 'செம்பவளக்காளி', 'கொங்கைத் தீ', ஜெயசங்கரின் 'நவீன பஸ்மாசுரன்', 'பிள்ளை அழுத கண்ணீர்' போன்ற நாடகங்கள் நுண்கலைத் துறையின் சிறந்த ஆற்றுகைகளாகும்.பாலசுகுமாரும் ஜெயசங்கரும் பேராசிரியர் மௌனகுருவின் நெருக்கத்திற்கும் விருப்பத்திற்குமுரிய மாணவர்கள்.அவரது செயற்பாடுகள் அனைத்திற்கும் இடது கரமாகவும் வலது கரமாகவும் நின்று செயற்பட்டவர்கள்.

## நுண்கலைத்துறையின் பிற செயற்பாடுகள்

### அறிஞர் கலைஞர் தொடர்பு

நுண்கலைத்துறை மாணவர்கள் நேரம் வாய்க்கும் போதெல்லாம் ஈழத்தின் புகழ்மிக்க கலைஞர்கள், அறிஞர்கள் பலரை நேரிலே கண்டு அளவளாவும் அரிய வாய்ப்புகளை பெற்றவர்களானமை குறிப்பிடத் தக்கது. முற்குறிப்பிட்டவாறு கொழும்பிலிருந்த பேராசிரியர் சரத்சந்திர, கலைஞர்களான தர்மசிறி பண்டாரநாயக்க, பராக்கிரம நிரிஎல்ல' ஏச்.ஏ. பெரேரா மான்செஸ்டா பல்கலைக்கழக பேராசிரியர் தொம்ஸன் இந்திய பாண்டிச்சேரிப் பல்கலைக்கழக நாடகத்துறைத் தலைவர் கே.ஏ. குண சேகரன், தஞ்சாவூர் பல்கலைக்கழக நாடகத்துறைத் தலைவர் பேரசிரியர் மு. இராமசாமி, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் அரசு முதலானோரின் சந்திப்புகள் அத்தகையன. இவை காரணமாக நுண்கலைத்துறை மாணவர்கள், பிரபல்யமான கலைஞர்கள், அறிஞர்களுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தவும் அவ்வழி புரிந்துணரக்கூடிய வாய்ப்புக்கள் உருவாகவும் தொடங்கின.

### வாராந்தச் செயற்பாடு

ஒவ்வொரு வாரமும் நுண்கலைத்துறையினர் சிறந்த திரைப்படங்களைக் காண்பித்து தேர்ந்த இரசனை உலகிற்குப் பழக்கப்படவும் விமர்சனத்திறன்

வளர்க்கப்படவும் மாணவர்களை ஆற்றுப்படுத்தும் முயற்சியில் நீண்ட காலமாக ஈடுபட்டுவருகின்றனர். நுண்கலைத்துறை மாணவர்களின் கலையுலக வெளித் தொடர்புகள், கலைப்பயணங்கள் ஒரு புறமாக, அவர்களது ஆய்வு நாட்டம் வளர்வதற்கான சூழலும் உருவாக்கப்பட்டு வந்தது.

**நுண்கலைத்துறை மாணாக்கரது ஆய்வுக் கட்டுரைகள்**

குறிப்பாக நுண்கலைத்துறையின் சிறப்புக் கற்கைநெறி மாணவர்களது நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளுள் கணிசமானவை கிழக்கு மாகாண மக்களது கலை, கலாசாரம் பற்றியனவாக விளங்கி வருவது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

அவற்றுள் பெரும்பாலானவை இதுவரை கவனிக்கப்படாத மக்கள் பற்றியவை. பறையடிப்போர், சலவைத் தொழிலாளர், வேடர் முதலான விளிம்பு நிலை மக்களின் கலை நிகழ்சிகள் அவர்களின் வரலாறு, பண்பாடு என்றவாறு அவர்களின் வாழ்வியலை அறிகின்ற அபூர்வமான வாய்ப்பு நுண்கலைத்துறை மாணவர்கட்கு ஏற்பட்டமை சாதாரணமான விடயமன்று. மாணவரது நுண்கலைத்துறை சார்ந்ததும் வெளியுலகம் சார்ந்ததுமான முதுகலைமாணி, முதுத்தத்துவமாணி, கலாநிதிப் பட்ட ஆய்வுகளும் அத்தகையவைதான். அவற்றிற்கெல்லாம் மாணவர்களை ஆற்றுப்படுத்துகின்ற புலமைத்துவமும், தலைமைத்துவமும் கொண்ட வருமாக விளங்கியவரும் விளங்குபவரும் பேராசிரியர் மௌனகுருவே என்பது கூறாமலே விளங்கும்.

**இறுவட்டுகள் நூறு**

நுண்கலைத்துறையின் முற்குறிப்பிட்ட சாதனைகளுள் கணிசமானவற்றை ஆவணப்படுத்தும் முகமாக அவற்றை 100 இறுவட்டுக்களாக தயாரித்து நிரந்தரமான சான்றாதாரங்களாக அவற்றை நுண்கலைத்துறை வெளிப் படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்க ஒன்று. இவற்றின் அறிமுக விழா முன்னாள் கலைப் பீடாதிபதி செல்வி. பொன்னையா தலைமையில் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி பத்மநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள வெகு விமர்சையான முறையில் நடைபெற்றது.

**இன்னிய அணி**

மேற்கூறிய அனைத்திலும் நுண்கலைத்துறை உருவாக்கிய 'இன்னிய அணி' செயற்திட்டம் மிக முக்கியமானது. ஈழத்தமிழரது பாரம்பரிய

இசைக்கருவிகளை மூலதனமாகக் கொண்டு உருவான இவ்வின்னிய அணி கிழக்குப் பல்கலைக்கழகத்திலே இன்றுவரை நிகழ்ந்து வரும் முக்கியமான விழாக்களிலே பயன்படுத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

இதன் முக்கியத்துவம் மட்டக்களப்பிலே போதியளவு உணரப் பட்டுள்ளதோ என்னவோ தமிழ் நாட்டிலும் கனடாவிலும் உணரப்பட்டு அது பற்றிய தேடல்களும் நிகழ்ந்து வருவது விதந்துரைக்கப்பட வேண்டியதே.



*இன்னிய அணி 2006*



*இன்னிய அணி 2008*

**கிழக்கின் பொங்கல்**

ரூபவாஹினியில் ஒளிபரப்பான 'கிழக்கின் பொங்கல்' (ஆகமமுறை சார்ந்ததும் ஆகமமுறை சாராததுமான பொங்கல் நிகழ்வுகள் பற்றியது) நிகழ்ச்சியும் பேராசிரியர் சி. மௌனகுரு, திரு. சி. ஜெயசங்கர் முதலானோரது நேர்காணல்களும் நுண்கலைத்துறையின் செயற்பாடுகளை வெளியுல கறியச் செய்துள்ளன. (நேர்காணல்கள் கனேடிய தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.) இவ்விடத்தில் நுண்கலைத் துறையின் ஆரம்பகாலத்திலே ரூபவாஹினியில் நடத்திய கண்ணகி குளுர்த்திப் பாடல்களும் அது மட்டக்களப்பு கலை, இலக்கிய ஆர்வலர் களிடையே வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியமையும் நினைவிற்கு வருவதை தவிர்க்க முடியவில்லை.

**ஓவியக் கண்காட்சிகள், இசைக் கச்சேரிகள், நடன நிகழ்வுகள்**

பேராசிரியர் மௌனகுருவின் வழிகாட்டல்களின் கீழ் மேற்கூறியவாறு நுண்கலைத்துறை ஈடுபட்டு உயர்மட்ட 'பிரமாண்டமான தயாரிப்புக்கள்' ஒருபுறமாக, சிறிய மட்டத்திலான சாதாரண அல்லது அசாதாரண செயற் பாடுகளும் காலத்திற்குக் காலம் இடம்பெற்று வந்துள்ளன.

ஓவியக் கண்காட்சிகள் (ஓவியர்களான வாசுகி, அருந்ததி, கிக்கோ நிர்மலவாசன், குலராஜின் ஓவியக் கண்காட்சிகள்), இசைக் கச்சேரிகள் (ராஜமொஸ்டர், ப்ரியா ஜதீஸ்வரன்), நடன ஆற்றுகைகள் (செல்வி. சாரா மிக்கொலாயின் நடனம்) என்பன அத்தகையவற்றுள் சிலவாகின்றன.

தனது முன்னாள் கல்லூரி அதிபரது அறை விஞ்ஞானபீட பீடாதி பதியின் பணிமனையாகவும, தான் படித்த ஆறாம் வகுப்பு அறை விவசாயபீட பணிமனையாகவும், ஏழாம் வகுப்பறை புவியியல் விரிவுரையாளரது அறையாகவும, எட்டாம் வகுப்பு விவசாய விஞ்ஞான விரிவுரையாளரது அறையாகவும், ஒன்பதாம் வகுப்பு விஞ்ஞான ஆய்வு கூடமாகவும், பத்தாம் வகுப்பு பௌதீக விரிவுரையாளரது அறையாகவும், பதினொராம் வகுப்பு தாவரவியல் விரிவுரையாளரது அறையாகவும் மாற்றம் கண்டிருப்பது பீடாதிபதி மௌனகுருவிற்கு பெரும் மகிழ்ச்சியை நல்கியிருந்தது.

வர்த்தக முகாமைத்துவ பீடாதிபதியின் பணிமனையில் வந்தாறு மூலை மத்திய மகாவித்தியாலயத்தின் அதிபர் விடுதியிருந்ததையும் தனது கலை கலாசார பீட பணிமனையில் மாணவர் விடுதியிருந்ததையும் நூலகத்தில் ஆண்கள் விடுதியிருந்ததையும் நினைவு கூர்ந்த போதெல்லாம்

பீடாதிபதி மௌனகுருவிற்கு ஏற்பட்ட பேரானந்தத்திற்கு எல்லை இருந் திருக்க முடியாது.

முன்னர் மாணவனாக நடந்து திரிந்த காலடித்தடங்களின் மீது இப்போது செனட் அங்கத்தவராக கவுன்சில் உறுப்பினராக பீடாதிபதியாக கலாநிதியாக முதுநிலை விரிவுரையாளராக காலடிகள் பதிய நடந்து திரிகின்ற வாய்ப்பு கிழக்குப் பல்கலைக்கழகத்து ஆசிரியர்கள் எவருக்கும் கிடைத்திராத அரிய வாய்ப்பு, அபூர்வ வாய்ப்பு, மகத்தான வாய்ப்பு, அழியாத தடங்களாக உருவாக்குவதற்கான வாய்ப்பு.

**சுவாமி விபுலானந்தர் அழகியற்கற்கைகள் நிறுவகத்தில்**

பேராசிரியர் மௌனகுருவின் கலை, இலக்கியச் செயற்பாடுகள் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்துடன் அதன் ஆரம்ப காலத்திலிருந்தே தொடர்புபட்டுள்ளன.

சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி என்று அந்நிறுவகம் தனித்தியங்கிய காலத்தில் அது கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக் கப்பட வேண்டுமென்று மாணவர்கள் கண்ட வெகு நாளையக் கனவு நீண்ட போராட்டங்களின் பின்னர் தான், நீண்ட காலத்தின் பின்னர் தான் நனவாகியது. அந்நனவாக்கத்தில் அதற்கு உந்து சக்தியாகத் திகழ்ந்தவரில் பேராசிரியர் மௌனகுருவிற்கு தனியிடம் உண்டு.



*சுவாமி விபுலானந்தர் அழகியற்கற்கைகள் நிறுவகத்தில் நடன மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை*



*சுவாமி விபுலானந்த அழகியல் கற்கை நிறுவகத்தில்*

பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலேதான் அதன் இயற் பெயரை *சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்* என மாற்றுவதில் பேராசிரியரால் வெற்றிபெற முடிந்தது.

இசை,நடனம் மாத்திரமன்றி நாடகம், ஓவியம், சிற்பம், சினிமா, பேட்டோகிராபி முதலான பாடங்கள் படிப்பிக்கப்படும் முழுமையான நுண்கலை நிறுவனமாக்கும் திட்டந்தான் சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம் என்ற பெயர் மாற்றமாகும்.

அதுமட்டுமன்று. புதுப் பெயர் கொண்ட நிறுவகத்திற்கு பொருத் தமான பாடத் திட்டமொன்றை சிங்களப் பேராசிரியர்கள் சிலருடனும் பேராசிரியர் சிவத்தம்பியுடனும் இணைந்து உருவாக்கியதிலும் மௌன குருவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

Theory என்பதற்குக் கொடுத்த முக்கியத்துவத்திற்கு சமமாக practical என்பதற்கும் முக்கிய இடம் கொடுக்கின்ற முறையிலே அமைந்துள்ள அதன் புதிய பாடத்திட்டம் அவ்விதத்தில் தனித்துவம் மிக்கது. ஈழத்திலே நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் வேறெந்தப் பல்கலைக்கழகங்களிலும் காணக் கிடைக்காத உன்னதமான முன்னோடிப் பாடத்திட்டமாக இது உள்ளது என்பது இத்துறைசார் நிபுணர்களது அபிப்பிராயம்.

மூன்று வருட காலம்(2002 - 2005) அவர் இந்நிறுவனத்தின் தலைவராகப் பணியாற்றியபோது இவற்றையெல்லாம் அவர் செய்து முடித்தார். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அவரை பின்னாளில் விபுலானநத அழகியற் கற்கைகள் நிறுவக ஆளுநர் குழு அங்கத்தவராக (member of the management committee) நியமித்தது. இன்றளவும் அவர் அப் பதவியை வகித்து வருகின்றார்

#### மாணவர் பரம்பரை

பல்கலைக்கழகத்திலே கடமையாற்றும் ஆசிரியர் ஒருவர் தனது தொழில் வழி அடைகின்ற ஆத்ம திருப்திகளுள் தலையாயது மாணவர் பரம்பரை ஒன்றினை உருவாக்குவதாகும். இவ்விதத்தில் சுவாமி விபுலானந்தர் அழகியற்கற்கைகள் நிறுவக புதிய விரிவுரையாளர்களுள் சிலரும் (திரு. சீவரெத்தினம், திரு.விமல்ராஜ், திரு.மோகனதாஸன், திருமதி. உமா) கிழக்குப் பல்கலைக்கழக புதிய விரிவுரையாளர்கள் அனைவரும் (திரு. சந்திரகுமார், திரு. ரவிச்சந்திரன், செல்வி. துஸ்ஷ்யந்தி, திரு. இன்பமோகன்) ஆகியோர் பேராசிரியர் மௌனகுருவின் மாணவர்களே.

மூத்த தலைமுறை சார்ந்தவர்களுள் திரு. பாலசுகுமார், திரு. ஜெய சங்கர், திலகநாதன் ஆகியோரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இவரிடம் கல்வி கற்றவர்களே. நூல்கள் எழுதியோ கருத்தரங்குகளிலே பங்குபற்றியோ, பரிசோதனை முயற்சிகளில் ஈடுபட்டோ, புதிய சிந்தனை களை வெளிப்படுத்தியோ இவர்களுள் பலரும் தம்மை இனங்காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

#### புலமைத்துறையில்

பல்கலைக்கழக பேராசிரியர்களுள் நிறுவகத்திற்காகவும் நிர்வாகத் திற்காகவும் தம்மை அர்ப்பணித்துள்ளோர் பலர் புலமைத்துறைக்கென தன்னை அர்ப்பணிப்பதிலே ஆர்வம் காட்டுவதில்லை. அது இயலாத தொன்று எனவும் கருதுவர். அத்தகையயோருக்கு உந்து சக்தியாக நிறுவகப் பணிகளுடன் புலமைப் பணிகளையும் ஆற்றமுடியும் என்ப தற்கான ஆளுமை மிக்க முன்மாதிரியாக பேராசிரியர் மௌனகுரு திகழ்கின்றார். ஆதலின் அவரது புலமைத்துறைச் செயற்பாடுகள் பற்றி நினைவு கூர்ந்து கொள்வதும் அவசியமானது.

*பேராசிரியர் எழுதிய நாடக நூல்களின் எண்ணிக்கை 16. அவர் எழுதி அச்சில் வெளிவந்த ஆய்வு நூல்கள் ஏறத்தாழ 15. அவை '20ம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்' (இணையாசிரியர்), 'சடங்கிலிருந்து நாடகம் வரை' (1985) 'ஈழத்துத் தமிழ் நாடக மரபில் யாழ்ப்பாண மகாஜனக் கல்லூரி' (1989), 'பழையதும் புதியதும்' (1982).*

*'சுவாமி விபுலானந்த அடிகளாரின் கலை இலக்கியக் கொள்கைகள்' (1992), 'சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும்' (1992), 'ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு' (1983), 'காலகட்டத்தினூடே ஒரு கவிஞன் நீலாவணன்' (1995), 'நடிப்பு முறைகள் பற்றிய எண்ணக்கருக்கள்' (1996), 'கலை இலக்கியக் கட்டுரைகள்' (1997), 'பேரா.எதிரிவீர*

*சரத்சந்திராவும் ஈழத்து நாடக மரபு' (1998), 'மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள்' (1998), 'அரங்கு ஓர் அறிமுகம்' (இணையாசிரியர், 2000), 'சங்ககால சமூகமும் இலக்கியமும் - ஒரு மீள்பார்வை' (2003), 'அரங்கியல் '(2003). (பதிப்பித்தல் நூல்கள் இப்பட்டியலில் அடங்கவில்லை.)*

மேற்குறிப்பிட்ட நூல்களில் தேசிய மட்டத்தில் சாகித்திய பரிசு பெற்ற நூல்கள் நான்காகும். அவை *'தப்பி வந்த தாடி ஆடு' (1989), 'பழையதும் புதியதும்' (1992), 'ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு' (1993), 'மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள்' (1998)* என்பனவாம்.

இவற்றைவிட பல நிறுவனங்களும் சங்கங்களும் அவரது பலநூல் களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவமளித்துள்ளன.

2006ம்ஆண்டின் சிறந்த ஆய்வு நூலுக்கான சம்பந்தர் விருது அவர் எழுதிய 'பண்டைத் தமிழர் வரலாறும் இலக்கியமும்' என்ற நூலுக்கு வழங்கப்பட்டது .

அவரது வாழ்நாள் சேவை அரச மட்டங்களிலும் தேசிய மட்டங் களிலும் பிரதேச மட்டங்களிலும் மதிக்கப்பட்டு கௌரவங்களும் பட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**பிற பல்கலைக்கழகத் தொடர்புகள்**


ஈழத்துப் பேராசிரியர் ஒருவர் பிற பல்கலைக் கழகங்களோடு தொடர்புபட்டவராகவோ பரீட்சகராகவோ இருப்பது இயல்பானதே. பேராசிரியர் மௌனகுரு தமிழகப் பல்கலைக்கழகங்கள் பலவற்றோடு நெருங்கிய புலமைத் தொடர்பு களை பேணி வருகின்றார். (உ+ம்: செ



ன்னைப் பல்கலைக்கழகம், பாண்டிச்சேரி பல்கலைக் கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருச்சி கலைக்காவேரி, கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகம், கேரள கலா மண்டலபம், கேரள திருச்சூர் நாடகப் பல்கலைக்கழகம்.)



ஒஸ்லோ நுண்கலைக்கல்லூரியில் நாடகத்துக்கான பயிற்சி



நீண்ட காலமாக ஈழத்தின் பல் கலைக்கழக, கல்லூரி மட்ட கருத்தரங்குகளில் பேராசிரியர் மௌனகுரு பங்கு பற்றி வந்திருப்பது அனைவரும் அறிந்த ஒன்று. அது பற்றி விரிந்துரைப்பது அவசியமுமன்று. ஆயினும் கடந்த சில ஆண்டுகளாக உலகின் புகழ் பூத்த பல்கலைக்கழகங்கள் சிலவற்றிற்குச் சென்று கலை இலக்கிய முறைகளில் ஈடுபட்டு வருவது பலருமறியா விடயங்களே. நோர்வேயிலுள்ள ஒஸ்லோ நுண்கலைக் கல்லூரியின் அழைப்பின் பேரில்(2009) அங்கு சென்று அக்கல்லூரியின் நாடகப் பாடத்திட்டம், விசேடமாக கூத்துப் பாடத்திட்டம் தயாரித்தமையும் நூலுருவிலே அக்கல்லூரியால் அன்மையில் அது வெளியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மீண்டும் 2010ல் அக் கல்லூரி அழைத்ததன் பேரில் அங்கே சென்று தமிழ் நாட்டு பிரளயனுடன் இணைந்து நாடகம் தயாரித்தமையும் அந் நாடகத்தில் தமிழர்களுடன் இஸ்ரேல், பாகிஸ்தான், நோர்வே, அமெரிக்கா, ஐரிஸ், ஆபிரிக்கா, ஆஸ்திரியா நாட்டுக் கலைஞர்கள் பலர் பங்கு கொண்டமையும் அவர்களுக்கு கூத்துக்களை பயிற்றியமையும் முக்கியமான விடயங்களாகின்றன.

மேலும் ஒஸ்லோ பல்கலைக்கழக மானிடவியற் துறை கருத்தரங்கிலும் ஒஸ்லோ நுண்கலைக் கல்லூரிக் கருத்தரங்கிலும் வடமோடிக் கூத்துப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை பேராசிரியர் மௌனகுரு சமர்ப்பித்திருந்தமையும் அமெரிக்காவின் புகழ் பெற்ற ஜோன் ஹொப்பின்கின்ஸ் பல்கலைக்கழக சமூகவியற்துறை ஒழுங்கு செய்த ஒரு கருத்தரங்கிலே இலங்கையின் நாடக மரபு பற்றி உரையாற்றியிருந்தமையும் *'இராவணேசன்'* (ஒளி நாடா) திரையிடப்பட்டமையும் கனடா ரொறன்ரோ பல்கலைக்கழகம் ஒழுங்கு செய்த *'தமிழ்க் கற்கைகள்'* மாநாட்டிலே கூத்துப்பற்றி உரையாற்றியமையும் பலரும் அறியாதவை.

**ஓய்வு பெற்ற பின்னரும் ஓயாமை**

பல்கலைக்கழகப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஆய்வுலகத்திற்கு விடை கொடுக்கின்ற பேராசிரியர்கள் பலர் காணப்படுகின்ற ஆரோக்கியமற்ற ஆய்வுச் சூழலில் அதற்கு மாறாக ஓய்வு பெற்ற பின்னரும் பேராசிரியர் மௌனகுருவின் கலை முயற்சிகளுக்கும் ஆய்வு முயற்சிகளுக்கும் ஓய்வு கிடைக்கவில்லை என்பதனையும் நாம் மனங்கொள்வது அவசியமே.




இராவணேசன் 2010 - இராவணன் வருகை

**புதுப்பொலிவுடன் *'இராவணேசன்'***

கலாநிதி நீலன்திருச்செல்வம் நினைவிற்காக *'இராவணேசன்'* (2010) புதுப்பொலிவுடன் தயாரிக்கப்படுகின்றது. இவ் *'இராவணேசன்'* 2010 பெப்ரவரியில் கொழும்பு லயனல் வென்ற் அரங்கில் இடம் பெற்ற மேடையேற்றத்தினை சிலாகித்து கலாநிதி அனஸ் இவ்வாறு எழுதி யிருப்பது குறிப்பிடத்தக்கதே

> கொழும்பு லயனல் வென்ற் நாடக அரங்கில் பேராசிரியர் சரச்சந்திரவின் மனமே (கூத்து நாடகம்) 1956 இல் முதல் முறையாக மேடை ஏறிய போது சிங்களச் சமூகம் தனக்குரிய தேசிய நாடக வடிவத்தை கண்டு பிடித்துவிட்டது என்றும் இது நம்ப முடியாத கலை அனுபவம் என்றும் புகழ் பெற்ற எழுத்தாளர் றெஜி ஸ்ரீவர்த்தன தனது உணர்ச்சிகளை வெளியிட்ட ஞாபகம் பேராசிரியர் சி. மௌனகுருவின் *இராவணேசன்* (கூத்து நாடகம்) அதே அரங்கில் அளிக்கை செய்யப்பட்ட போது என் நினைவுகளில் தோன்றி மறைந்தது ஒரு தற்செயல் நிகழ்ச்சி அல்ல!
>
> சிங்கள மக்களின் நாடி நரம்புகளில் ஊறிக்கிடந்த பழைய நாடக மரபுகளையும் கூத்துப் பாணியையும் ஏற்றுத் திரட்டியதாக அழகுணர்வை நிறைவு செய்யக் கூடியதாக *'மனமே'* மட்டும் தான் இலங்கையின் நவீன நாடகமாக) உருவாக முடிந்தது என்று நீடித்திருந்த மனப்பதிவை மௌனகுருவின் *இராவணேசன்* மாற்றியமைத்தது. றெஜி ஸ்ரீவர்த்தனாவின் எண்ணங்களில் மனமே ஏற்படுத்திய கலை அனுபவங்களுக்குச் சிறிதும் குறைவற்ற ஆச்சரியத்தையும் குதூகலத்தையும் அன்று லயன்ஸ் வென்றில் *இராவணேசன்* உருவாக்கிய அனுபவம் மறக்க முடியாதது.




இராவணேசன் 2010 - இறுதிப் போர்


**மேடையில் மீண்டும் ஆற்றுகைக் கலைஞனாக**

2010 டிசம்பரில் நடைபெற்ற பலநாட்டு எழுத்தாளர்களும் பங்குகொள்ளும் பிர சித்தி பெற்ற காலி உலக எழுத்தாளர் மாநாட்டில் இராவணேசனின் சில பகுதிகளை மேடையிடும்படி விழா ஏற் பாட்டாளர் மௌனகுருவிடம் கேட்டுக் கொணடனர்.அததோடு அவரே இராவணன் பாத்திரம் ஏற்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். திறந்த இருதய சத்திர சிகிச்சை க்குட்பட்டிருந்த (opeon Heart surgery) மௌனகுரு வைத்தியரின் ஆலோச னைகள் பெற்ற பின் ஏறத்தாள 45 வருடங்களின் பின் மீண்டும்









இராவணனாக மேடையேறினார். அயல் நாட்டு எழுத்தாளர்கள் அந்த ஆற்றுகையைக் கண்டு மகிழ்ந்தனர்.

2011 இல் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட பலவேறு நாட்டவர்களும் கலந்து கொண்ட பெரும் இசை விழாவில் இதே நிகழ்வை ஏற்பாட்டாளர் கேட்டிருந்தனர். தனது மாணவர்களுடன் அவர் மீண்டும் இராவணனாக மேடையேறினார்.

**அரங்க ஆய்வு கூடம்**

அவர் தமது அனுபவங்களை இளம் தலைமுறையினரிடம் பகிர்ந்து கொள்ளும் நோக்குடனும் ஆய்வுகளுக்கூடாகப் புதிய கண்டு பிடிப்பு களைச் செய்யும் ஆக்கததிறன் மிக்கோரை உருவாக்கும் நோக்குடனும் மட்டக்களப்பில் ஓர் அரங்க ஆய்வு கூடத்தை உருவாக்கியுள்ளார். எந்தவிதமான தளைகளுமின்றி சுதந்திரமாகக் கற்பனை செய்யவும் வெளிப்படுத்தவுமான ஓர் கலை வெளியினை இவ்வாய்வு கூடம் இங்கு வருவோர்க்களிக்கிறது.

32 பேர் இவ்வாய்வுச் செயற்பாடுகளிலீடுபடுகின்றனர். காத்திரமான பயிற்சிகளும் விரிவுரைகளும் அவர்கட்களிக்கப்படுகினறன. இங்கே கலைத்திட்டமில்லை, பாடத்திட்டமில்லை. ஆக்கத்திறனுக்கே அதிக இடம் தரப்படுகிறது. வாரம் தோறும் ஞாயிறு முழு நாளும் இவர்கள் அரங்க ஆய்வு கூடத்திற் செயற்படுகின்றனர், ஆடுகின்றனர், பாடுகின்றனர், நடிக் கின்றனர், புதிது புதிதாகக் கற்பனை செய்கின்றனர், தியானம் செய்கினறனர், எழுதுகின்றனர், அனைத்திற்கும் பயிற்சிகள் வழங்கப்படுகினறன. எல்லாமே இலவசம். இவர்களை மௌனகுரு மாணவர்கள் எனறழைக் காமல் சக பயணிகள் என்றே அழைக்கிறார்.

மௌனகுரு தனக்கு ஊக்க சக்தியாக இருப்பவர்கள் தமது மாணவர்கள் என்றே கூறுவார். எனினும் அவரின் இரு பெரும் ஊக்க சக்திகள் அவரது மகன் சித்தார்த்தனும் மனைவி சித்திரலேகாவும் ஆவர்.

தன் ஓய்வு காலத்தை ஓய்வில்லாமல் மகிழ்ச்சியாகவும் அதேவேளை தனக்கும் பிறர்க்கும் பயன் தருவகையிலும் களித்து வருகிறார்.



# 610